**தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வளர்ச்சி) அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை திரு.நா.பாலசுப்பிரமணியன்.,**

ந.க.எண்.வ6/6485/2018 -2 நாள்: 05.06.2018

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - தூத்துக்குடி மாவட்டம் - தட்டச்சர் / இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-2 / காசாளர் நிலையில் - பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

படிக்கப் பட்டவை:

1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளர் கடிதம் எண்.5297/PSD-G2/2017, நாள்: 21.09.2017.
2. தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் வ6/25335/2017, நாள்: 16.10.2017.
3. சம்பந்தப்பட்ட அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.
4. சம்பந்தப்பட்டவர்களின் பணிப்பதிவேடுகள்.

-------------------

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி IV இல் அடங்கிய இளநிலை உதவியாளர் நிலையிலான பணியிடங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு படிக்கப்பட்ட (2) இல் குறிப்பிட்டுள்ள செயல்முறை ஆணைகளின்படி தூத்துக்குடி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் தட்டச்சர் / இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை -2/ காசாளராக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் பின்வரும் நபர்களின் பணியினை, படிக்கப்பட்ட (1) இல் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்கு உட்பட்டு தனியர்களின் பெயருக்கெதிரே கலம் எண்.3.ல் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் இளநிலை உதவியாளர் / ஊர்நல அலுவலர் நிலை-2 / காசாளர் நிலையில் பணி வரன்முறை செய்து இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | பணியேற்பு செய்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1. | ச.சிவஅனு,<br>ஊர்நல அலுவலர் நிலை-2,<br>உடன்குடி ஊராட்சி ஒன்றியம். | 27.10.2017 மு.ப. | 27.10.2017 மு.ப. |
| 2. | மு.பாலசுப்பிரமணியன்,<br>காசாளர்,<br>ஆழ்வார்திருநகரி ஊராட்சி ஒன்றியம். | 26.10.2017 மு.ப. | 26.10.2017 மு.ப. |
| 3. | க.தர்மராஜ்,<br>ஊர்நல அலுவலர் நிலை -2,<br>விளாத்திகுளம் ஊராட்சி ஒன்றியம். | 28.10.2017 மு.ப. | 28.10.2017 மு.ப. |

| வ. எண். | பெயர் மற்றும் பணிபுரியும் அலுவலகம் (திருவாளர்கள்) | பணிவரன்முறை செய்யப்படும் நாள் | பணியேற்பு செய்த நாள் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 4. | ப.சக்திபேச்சி,<br>காசாளர்,<br>சாத்தான்குளம் ஊராட்சி ஒன்றியம். | 26.10.2017 மு.ப. | 26.10.2017 மு.ப. |
| 5. | ரா. அந்தோணி அமலா,<br>இளநிலை உதவியாளர்,<br>மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,<br>தூத்துக்குடி. | 26.10.2017 மு.ப. | 26.10.2017 மு.ப. |
| 6. | ஜெ.சந்தோஷ் குமார்,<br>இளநிலை உதவியாளர்,<br>உதவிஇயக்குநர் (தணிக்கை) அலுவலகம்,<br>தூத்துக்குடி. | 26.10.2017 மு.ப. | 26.10.2017 மு.ப. |

<u>நிபந்தனை:</u>

"இப்பணிநியமனம் முற்றிலும் தற்காலிகமானது. இந்நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் நிலுவையில் உள்ள 2015-16ம் ஆண்டிற்கான தொகுதி-IV-ல் அடங்கிய பணியிடங்கள் நியமனம் (Recruitment) தொடர்பான வழக்குகளின் தீர்ப்பின் அடிப்படையில் உறுதி செய்யப்படும்."

இப்பொருள் தொடர்பாக உரிய பதிவுகள் தனியர்களின் பணிப்பதிவேட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என சான்றளிக்கப்படுகிறது.

மாவட்ட ஆட்சியரின்
நேர்முக உதவியாளர் (வளர்ச்சி),
தூத்துக்குடி.

05/06/18

பெறுநர்:

சம்பந்தப்பட்டவர்கள்
(அலுவலகத் தலைவர் மூலம்)

நகல்:

1. இணை இயக்குநர்/திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தூத்துக்குடி.
2. உதவி இயக்குநர் (தணிக்கை), தூத்துக்குடி.
3. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வ.ஊ/கி.ஊ), உடன்குடி/விளாத்திகுளம்/சாத்தான்குளம்/ஆழ்வார்திருநகரி.
4. வ6 பிரிவு (இருப்புக்கோப்பு).